கிண்ணியா நகர சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 செப்தெம்பர் 11 ஆம் 2019 நவம்பர் 06 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 கிண்ணியா நகர சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கு விடயம்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதிய பணியாளர் கடன் ஐந்தொகை மீதி ரூபா 4,215,395 தொகையாகக் காணப்பட்ட போதிலும் 2018 சனவரி 1 ஆம் திகதி அம்மீதிகளைக் கணக்குகளில் கொண்டுவரும் போது ரூபா. 4,244,628 தொகையாக காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளை எதிர்வரும் ஆண்டிற்கு கொண்டு செல்லும் போது தொகைகளின் சரியான தன்மையை உறுதி செய்ய வேண்டும். மேலும் திருத்தப்பட்ட விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தவறுதலாக கொண்டு வரப்பட்ட பணியாளர் கடன் ஆரம்ப மீதி திருத்தப் பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் கட்டடம் ரூபா 3,954,342 தொகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,169,967 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 215,625 தொகையால் கட்டட பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இக்குறைபாடு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டடப் பெறுமதி வருமானக் கூற்றில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 ஆம் ஆண்டிற்கான பெறவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டண அறவீ ரூபா 2,105,588 மீளாய்வாண்டில் பெறப்பட்ட போதிலும் இம்மீதி மீளாய்வாண்டு வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தவறுகள் ஏற்படாத வண்ணம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணங்கள் கடந்த காலங்களில் அட்டுறு அடிப்படையில் பதிவிடாது கிடைக்கும் ஆண்டில் வருமானமாகப் பதிவிடப்பட்டது. இனிவரும் காலங்களில் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் கேள்வி வைப்புக்களின் ஆரம்ப மீதி ரூபா 7,371,118 தொகையாக காணப்பட்டதுடன் பெறப்பட்ட கேள்வி வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,250,571 தொகையாகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் பெறப்பட்ட தொகையாக ஆரம்ப மீதியையும் சேர்த்து ரூபா 10,627,689 தொகையென பதியப்பட்டமையால் அத் தொகையால் அம் மீதி அதிகரித்துக் காணப்படுகின்றது. | அதிகரித்துக் காணப்படும் மீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கேள்வி வைப்புக்கள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மீளாய்வாண்டில் மீள் செலுத்தப்பட்ட ரூபா 733,000 பெறுமதியான கேள்வி வைப்புக்கள் கேள்வி வைப்பு மீதிகளிலிருந்து கழிக்கப்படாமையினால் அத்தொகையால் அம்மீதி அதிகரித்துக் காணப்படுகின்றது. | அதிகரித்துக் காணப்படும் மீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கேள்வி வைப்புக்கள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி இருப்பு பெறுமதி ரூபா 563,758 தொகையாகக் காணப்பட்ட போதிலும் இருப்புப் பட்டோலையின் படி ரூபா 440,155 தொகையாகக் காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் இம்மீதி ரூபா 123,603 தொகையால் அதிகரித்துக் காணப்பட்டது. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இருப்புப் பட்டோலை சம்மந்தமாக திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (எ) | மீளாய்வாண்டில் சபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்ட சம்பளங்கள், சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் முறையே ரூபா.3,387,676 ரூபா.210,000 கூட்டுமொத்தமாக ரூபா 3,597,676 தொகை உள்@ராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அத்தொகையினை பெறவேண்டிய வருமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சம்பளங்கள், சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுத் தொகைகள் உரிய திகதியில் உள்@ராட்சி ஆணையாளரிடம் இருந்து கிடைக்கப் பெறாமையால் வருமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டில் ரூபா 1,278,411 தொகையினை செலுத்த வேண்டியதாக இருந்த போதிலும் இம்மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் கடன் கொடுத்தோர் மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் நிதி நடவடிக்கைக்கு உட்படவில்லை என்பதனால் (அட்டுறு கோட்பாடு பின்பற்றவில்லை) |
| (ஐ) | யூன் தொடக்கம் திசெம்பர் 2017 வரையான காலப்பகுதிக்கான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,395,666 தொகை மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் நீதிமன்ற தண்டப்பண வருமதிக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் அக்கணக்கு மீதி அத்தொகையால் அதிகரித்துக் காணப்படுகின்றது. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த காலப்பகுதியில் அட்டுறு கணக்கியல் கோட்பாடு பேணப்படவில்லை. |
| (ஒ) | 2017 திசெம்பர் 31 ஆம் திகதி நெல்சிப் பிடிகாசு வைப்பு மீதி ரூபா 1,205,344 தொகையானது மீளாய்வாண்டில் மீளளிப்பு விபரங்கள் எதுவும் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டிருக்காத போதிலும் அம்மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதனால் மீதியை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் காணப்படுகின்றது. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வைப்புக்கள் மீளளிக்க முடியாதவை எனவும். |
| (ஓ) | சபையினால் தயாரித்து வழங்கப்பட்ட வருமானச் செலவுக் கணக்கின் பிரகாரம் ஆண்டுக்கான தேறிய செலவிலும் கூடிய வருமானம் ரூபா 7,272,660 தொகையாக காணப்பட வேண்டிய போதிலும் கணக்கீட்டுத் தவறு காரணமாக ரூபா 869,917 தொகையாக காட்டப்பட்டமையினால் ரூபா 6,402,743 தொகையினால் அம்மீதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த காலத்தவறு சம்மந்தமாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஔ) | மீளாய்வாண்டின் வருமான செலவுக் கணக்கின் படி திரண்ட நிதிக்கு மாற்றப்பட வேண்டிய ரூபா 7,272,660 தொகைக்குப் பதிலாக ரூபா ரூபா 869,917 | இக்கணக்கீட்டுக் குறைபாட்டை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமான செலவிக் கணக்கின் படி மீதி திரண்ட நிதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

மாற்றப்பட்டமையினால் ரூபா 6,402,743 தொகை ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கு செலவு மீதி ரூபா 29,358,517 தொகையை அடையாளம் கண்டு பதிவழிப்புச் செய்யாது மொத்தமாக திரண்ட நிதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கு மீதிகளுக்கான காரணங்களை இனம்கண்டு அவற்றிற்கு உரிய பதிவுகளையும் இணங்கண்டு பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொங்கல் கணக்கு மீதி 29,358,517.00 ரூபாவாக காணப்பட்ட போதும் தற்போது 24,611,595.00 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் இனங்காணப்பட்டு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 34,662,926 பெறுமதியான 05 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள 05 விடயங்கள் தொடர்பாக விபரமான உப பதிவேடுகள் மற்றும் கால பகுப்பாய்வு என்பன எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| நகர சபைகள் கட்டளைச் சட்டம் 255 அத்தியாயம் 177(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2019 ஆகஸ்ட் 21 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் சுருக்கத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிதிக்கூற்றுக்களின் சுருக்கத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 10,171,996 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 14,948,827 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2018.12.31 இல் நிலுவை -ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வீதவரிகள் | 2,000 | 752 | 83 | 2,299 | 3,626 | 1,178 | 411 | 1,579 |
| வாடகை | 11,500 | 8,718 | 9,536 | 11,529 | 10,706 | 12,610 | 6,812 | 9,501 |

(அ) மீளாய்வாண்டில் வீதவரி நிலுவை கடந்த வருடத்தை விட ரூபா 720,000 தொகையால் அதிகரித்துள்ளது. இது வீதவரி அறவீட்டில் மந்த நிலைமையைக் காட்டுகின்றது.

2.2.2 முத்திரைத் தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசமான கரைச்சி வீதிக்கு அருகில் உள்ள ஆற்றுப்பகுதியில் பிரதேச மக்களால் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதனால் ஆற்றுப்பகுதி மாசடைந்து காணப்படுகின்றது. இது தொடர்பாக கடந்த வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இன்றுவரை சபையினால் எவ்வித நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தங்கள் அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது வேறு இடங்களில் கொட்டுவதற்கும், சபை சேகரித்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்க வில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை சபை தயாரித்து அது தொடர்பாக முன்னேற்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை தயாரித்து அதற்கேற்ப முன்னேற்ற நடவடிக்கையினை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது சபை அத்தியாவசிய சேவையைக் கருத்திற் கொண்டும் COPA நடவடிக்கையினாலும் இலக்குகள் இனங்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன் படுத்தப்பட்டு வந்த PP-LL 6921 டிப்பர் வாகனம் 2017 திசெம்பர் 14 ஆம் திகதியன்று விபத்துக்குள்ளாகி சேதமடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் விசாரணைக்குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி, மற்றும் விபத்துக்கு பொறுப்பான நபர்களை இனங்காணல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்டலை மேலும் கணக்காய்வுத் திகதியான 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை வாகனம் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபத்துக்குள்ளான வாகனம் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் இழப்புக்கள் உரியவர்களிடம் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் சபையின் எல்லைக்குள் காணப்படும் 07 வட்டாரங்களில் 05 வட்டாரங்களுக்கான ஆதன வரி மதிப்பீட்டு பெறுமதி, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையிலேயே ஆதனவரி அறவிடப்படுகின்றது. மேலும் 02 வட்டாரங்களுக்கான மதிப்பீடு இன்று வரை செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரியை உரிய முறையில் மதிப்பீடு செய்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அளவீட்டுத் திணைக்க ளத்திடம் பல தடவைகள் கோரப்பட்டிருந்த போதும் அவர்களின் தாமதமே இதற்குக் காரணமாகும். உடன் அமுல்படுத்த முகாமைத்துவ கணக்காய்வு குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் நிதியளிப்பின் கீழ் 2008 ஆம் ஆண்டு நகரசபைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 26 தையல் இயந்திரங்களில் 22 தையல் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் பயனற்றுக் காணப்படுகின்ற போதிலும் அவற்றைத் திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் தையல் இயந்திரங்கள் சில வாடகைக்கு வழங்கி வருமானம் அறவிடப்படுவதுடன் ஏனையவற்றையும் உரிய நோக்கத்துக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஈ) பொதுநிர்வாக அமைச்சின் 09/2009(1) ஆம் இலக்க 2009 யூன் 17 ஆம் திகதிய சுற்றறிக்கையின் (ii) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத் தலைவர் உட்பட அரச அலுவலகர்கள் அனைவரும் தமது சேவை நிலையங்களுக்குள் உள்வருகை மற்றும் வெளிச்செல்கையினையும் விரல் அடையாள பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் சபையின் செயலாளர் அவ்வாறு செய்யத்தவறியிருந்தார். | சபையின் உத்தியோகத்தர்களின் உள்வருகை வெளிச்செல்கை விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் நியமனம் என்பதால் இரு நிறுவனங்களில் கடமை புரிவதால் விரல் அடையாளப் பதிவு வைக்கவில்லை. இனிவரும் காலங்களில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) 2015 மே 20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை இலக்கம் 11/2015 இன் பிரிவு 05 இன் பிரகாரம் அரச அலுவலகர்களுக்கான மதிய உணவு இடைவேளை 30 நிமிடங்களே மாத்திரமாகும். இதற்கு முரணான வகையில் சபையில் கடமை புரியும் ஊழியர்கள் 30 நிமிடம் தொடக்கம் 2.30 மணித்தியாலங்களுக்கு மேல் மதிய உணவு இடைவேளை எடுப்பது அவதானிக்கப்பட்டது. இதன் போது சுற்று நிருபத்திற்கமைய அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை நிறுவனத்தலைவரினால் எடுக்கப்பட்டிருக்கில்லை. | சுற்று நிருபத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை ஊழியர்கள் மதிய உணவு இடைவேளையை முறைப்படி நடைமுறைப் படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்பதையும் இனிவரும் காலங்களில் தாங்கள் கூறியதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

3.4. சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கணக்காளர் பதவி கடந்த 08 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டிருந்த போதிலும் அதனை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபை உள்@ராட்சித் திணைக்களத்திடம் பல தடைவை கோரிக்கை விடுத்துள்ள போதும் இன்னும் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கவில்லை. |

3.4.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட 17 வாகனங்கள் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல வாகனங்களும் சபைக்கு நன்கொடையாகப் பெறப்பட்டவை. அவற்றில் சில சபையின் பேரில் மாற்றப்பட்டுள்ளது. ஏனையவையும் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

3.4.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் திண்மக்கழிவு அகற்றும் வாகனம் (Gully Bowser), 2 உழவு இயந்திரங்கள் மற்றும் இரண்டு சக்கர உழவு இயந்திரம் என்பன ஐந்து வருட காலத்திற்கு மேலதிகமாக பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்களுக்கு உரிய நடவடிக்கை எடுத்து அவற்றின் பயன்பாட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இருப்புக் கணிப்புச் சபை உறுப்பினர்களின் அறிக்கையைப் பெற்று இவ்வாகனங்கள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3.5 பெறுகை

3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டம் பேணப்பட வேண்டும் என்பது தொடர்பான அறிவு இருக்காத போதும் தற்போது அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுக்கு தற்போது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் அது தொடர்பாக அறிக்கைகள் தங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |